அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதங்கள் : 06/2025

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2025.10.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச தாபனங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களினால் சட்டமா அதிபரின் மதியுரை அல்லது ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுதல்**

தாபனக்கோவையின் I ஆம் தொகுதியின் XXXIII ஆம் அத்தியாயம் தொடர்பில் உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.

02. அதன் பிரகாரம் மேற்படி அத்தியாயத்தின் உபபிரிவு 1:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டமா அதிபரிடம் மதியுரை அல்லது ஆலோசனை கோருகின்ற போது அவ்வாறு மதியுரை அல்லது ஆலோசனை கோரப்படுவது என்ன விடயம் தொடர்பாகவென தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும் எனவும், உரிய விடயம் தொடர்பான பூரண விடயங்களடங்கிய நிகழ்வு வெளிப்படுத்துகையொன்றையும் அவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும், அத்தோடு அலுவலகக் கோவையொன்று சமர்ப்பிக்கப்படின் அதன் உரிய பக்கங்களில் தொடர்பு விபரங்களும் குறிப்பிடப்படல் வேண்டும் எனவும், குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு அவ் அத்தியாயத்தின் 1:2 உபபிரிவினால் கருதுகோளான விடயங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கவென சட்டமா அதிபரிடம் கோரலாகாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. அரச தாபனமொன்று அல்லது அரச உத்தியோகத்தரினால் சட்டமா அதிபரிடம் மதியுரை அல்லது ஆலோசனை கோருகின்ற போது பின்பற்ற வேண்டிய ஏற்பாடுகள் XXXIII ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதிலிருந்து அப்பால் மதியுரை அல்லது ஆலோசனை கோருவதாகவும், முன்னர் ஆலோசனை வழங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக மீண்டும் மீண்டும் விசாரிப்பதாகவும் சட்டமா அதிபரினால் அவதானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

04. அதனால் சட்டமா அதிபரிடம் மதியுரை அல்லது ஆலோசனை கோருகின்ற போது, தாபனக்கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவென தெரிவிக்கின்றேன்.

ஒப்பம் /எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல் : ade-i@pubad.gov.lk